©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 11.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 16] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 20, 2016
சித்திரை 7, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு—2047

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

#### அறிவிக்கைகள்

*[அரசாணை எண் (2D) எண் 43, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை 17 ஆகஸ்ட் 2015.]*

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளின் 54 ஆம் விதியை சேர்ந்த 1 துணை விதியின் (iii) மற்றும் (iv) ஆம் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் நபர்களை, மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர்களாக இதனால் நியமனம் செய்கிறார்.

**தனி நபர்கள்**

(1) அரசு செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை—600 009. — தலைவர்

(2) மலைத்தோட்ட தலைமை ஆய்வாளர்,
தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம்,
சென்னை—600 006. — செயலாளர்

**I - அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் :**

(1) தொழிலாளர் நல ஆணையர்,
சென்னை—6.

(2) தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்),
பொதுப் பணித் துறை,
சென்னை—600 009.

(3) அரசு துணைச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,
சென்னை—600 009.

(4) அரசு கூடுதல் செயலாளர்,
சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை,
சென்னை—600 009.

**II – வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள் :**

(1) நிருவாக இயக்குநர்,
அரசு இரப்பர் கழகம்,
வடசேரி, நாகர்கோயில்–629 001.

(2) பொது மேலாளர்,
தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்,
குன்னூர்–643 101.

(3) செயற்குழு உறுப்பினர்.
தமிழ்நாடு பயிரிடுவோர் சங்கம்,
கோயம்புத்தூர்–641 018.

(4) தலைவர்,
நீலகிரி பயிரிடுவோர் சங்கம்,
குன்னூர்–643 101.

**II – தொழிலாளர்களின் பிரதிநிதிகள் :**

(1) திரு. பி. ஜெயராமன்,
மாநில செயலாளர், மலைத்தோட்ட பிரிவு,
அண்ணா தொழிற் சங்க பேரவை,
58/22, விஜய தீபா காட்டேஜ்,
கல்லூரி சாலை, குன்னூர்–2, நீலகிரி மாவட்டம்.

(2) திரு. எஸ். மோகன்,
மாநில குழு உறுப்பினர்,
தமிழ்நாடு அனைத்திந்திய தொழிற்சங்க பேரவை,
1/377, வாட்டர்பால் எஸ்டேட், கோட்டம்–I,
வாட்டர்பால் அஞ்சல்.

(3) திரு. சி. அனந்த கிருஷ்ணன்,
பொதுச் செயலாளர்,
இந்திய தேசிய தொழிற்சங்கப் பேரவை,
கிருஷ்ணகுதீரம்,
திருவத்தூர்,
கன்னியாகுமரி–629 177.

(4) திரு. கேசி. கோபி குமார்,
ஒருங்கிணைப்பாளர்,
அனைத்திந்திய மலைத்தோட்ட தொழிலாளர்கள் இணையம்,
இந்திய தொழிற்சங்க மையம்,
39இ1, சினிமா நகர்,
சின்னேரிவயல்காடு, சேலம்–636 009.

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

• *[அரசாணை எண் 130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.]*

**•படிக்கவும்.**

**1.** அரசாணை நிலை எண் 101, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20–05–1993.

**2.** சென்னை–2, திருவாளர்கள் மெட்ராஸ் ஜிம்கானா க்ளப் நிறுவனத்தின் 30–10–2010 நாளிட்ட கடிதம்.

**3.** புது தில்லி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்–II (விதிவிலக்கு) அவர்களின் 27–04–2011 நாளிட்ட E-III/18(1)/11(TN)/3070/ரத்து/3121 ஆம் எண் கடிதம்.

**ஆணை : எண் 130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.**

சென்னை–2, (TN3070), திருவாளர்கள் மெட்ராஸ் ஜிம்கானா க்ளப் நிறுவனத்திற்கு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் 17(1)(a) பிரிவின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், (காண்க. 16–06–1993 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II – பிரிவு I இல் 616–619 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட (ஆங்கிலத்தில்) II(2)/LE/2763/93 ஆம் எண் அறிவிக்கை);

அந்த நிறுவனம், 01–11–2010 ஆம் நாளிலிருந்து விதிவிலக்கைச் சரண் செய்வதாகத் தற்போது தெரிவித்துள்ளதாலும் (காண்க. மேலே பார்வை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள 30–10–2010 நாளிட்ட அதனுடைய கடிதம்);

புது தில்லி, வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்– II, தொழிலாளர் வுருங்கால வைப்புநிதி நிறுவனம், விதிவிலக்கைச் சரண் செய்வதற்கான நிறுவனத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளதாலும்;

எனவே, தற்போது, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வுருங்கால வைப்புநிதிகள் மற்றும் பல்வகை வழிவகைகள் (மத்திய சட்டம் 19/1952) சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், சென்னை–2 (TN/3070), திருவாளர்கள் மெட்ராஸ் ஜிம்கானா க்ளப் நிறுவனத்திற்கு, மேற்சொன்ன சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சார்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் வழங்கப்பட்ட விதிவிலக்கை 01–11–2010 ஆம் நாளிலிருந்து இதனால் ரத்து செய்கிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை எண் 131, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.]*

**• படிக்கவும்.**

**1.** அரசாணை நிலை எண் 830, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19–05–1979.

**2.** சென்னை, ஃப்யூச்சுரா பாலியெஸ்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் FPLPF/014/08-09 ஆம் எண் கடிதம்.

**3.** புது தில்லி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்–II (விதிவிலக்கு) அவர்களின் 12–09–2011ஆம் நாளிட்ட E-III/18(4)/09(TN)/ரத்து/27416 ஆம் எண் கடிதம்.

**ஆணை : எண் 131, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.**

சென்னை, ஃப்யூச்சுரா பாலியெஸ்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் 17(1)(a) பிரிவின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், (காண்க. 13–06–1979 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II – பிரிவு 2 இல் 311–314 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட (ஆங்கிலத்தில்) II(2)/LE/3500/79 ஆம் எண் அறிவிக்கை).

அந்த நிறுவனம், 01–08–2009 ஆம் நாளிலிருந்து விதிவிலக்கைச் சரண் செய்வதாகத் தற்போது தெரிவித்துள்ளதாலும் (காண்க. மேலே பார்வை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கடிதம்);

புது தில்லி, வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்– II, தொழிலாளர் வுருங்கால வைப்புநிதி நிறுவனம், விதிவிலக்கைச் சரண் செய்வதற்கான நிறுவனத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளதாலும்;

எனவே, தற்போது, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வுருங்கால வைப்புநிதிகள் மற்றும் பல்வகை வழிவகைகள் (மத்திய சட்டம் 19/1952) சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஃப்யூச்சுரா பாலியெஸ்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு, மேற்சொன்ன சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சார்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் வழங்கப்பட்ட விதிவிலக்கை 01–08–2009 ஆம் நாளிலிருந்து இதனால் ரத்து செயகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை எண் 132, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.]*

**•படிக்கவும்.**

1. அரசாணை நிலை எண் 1103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–07–1972.

2. கோயம்புத்தூர், திருவாளர்கள் ஏ.ஆர்.சி. ரீடிரெட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 09-11-2009 நாளிட்ட கடிதம்.

3. புது தில்லி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்–I-ன் (இணக்கம்) அவர்களின் 01–06–2011 ஆம் நாளிட்ட E-III/18/(2)/11(TN)/6259/ரத்து/9090 ஆம் எண் கடிதம்.

**ஆணை : எண் 132, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 20 ஆகஸ்ட் 2015.**

கோயம்புத்தூர், திருவாளர்கள் ஏ.ஆர்.சி. ரீடிரெட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் 17(1)(a) பிரிவின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், (காண்க. 09–08–1972 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II – பிரிவு I இல் 746–747 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட (ஆங்கிலத்தில்) II/3831/1972 ஆம் எண் அறிவிக்கை).

அந்த நிறுவனம், 01–09–2009 ஆம் நாளிலிருந்து விதிவிலக்கைச் சரண் செய்வதாகத் தற்போது தெரிவித்துள்ளதாலும் (காண்க. மேலே பார்வை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கடிதம்);

புது தில்லி, வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர்– II, தொழிலாளர் வுருங்கால வைப்புநிதி நிறுவனம், விதிவிலக்கைச் சரண் செய்வதற்கான நிறுவனத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளதாலும்;

எனவே, தற்போது, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிகள் மற்றும் பல்வகை வழிவகைகள் (மத்திய சட்டம் 19/1952) சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கோயம்புத்தூர், திருவாளர்கள் ஏ.ஆர்.சி. ரீடிரெட்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் வழங்கப்பட்ட விதிவிலக்கை 01–01–2009 ஆம் நாளிலிருந்து இதனால் ரத்து செய்கிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை எண் 134, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 24 ஆகஸ்ட் 2015.]*

**• படிக்கவும் :**

1. அரசாணை நிலை எண் 1605, தொழிற்துறை, தொழிலாளர் மற்றும் கூட்டுறவு (ஆய்வுக்கூடம்) துறை, நாள் 15–03–1963.
2. சென்னை, திருவாளர்கள் கார்டன் உட்ரோஃப் தோல் தயாரிப்பு நிறுவனத்தின் 08–09–2008 ஆம் நாளிட்ட கடிதம்.
3. புது தில்லி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர் – II (விதிவிலக்கு) அவர்களின் 30–09–2009 ஆம் நாளிட்ட E-III/18(3)/09/TN/ரத்து/73112 ஆம் எண் கடிதம்.

**ஆணை: எண் 134, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 24 ஆகஸ்ட் 2015**

சென்னை, திருவாளர்கள் கார்டன் உட்ரோஃப் தோல் தயாரிப்பு நிறுவனத்திற்கு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் 17(1)(a) பிரிவின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், (காண்க. 03–04–1963 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II – பிரிவு 1 இல் 19–20 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட (ஆங்கிலத்தில்) II–1/2014/1963 ஆம் எண் அறிவிக்கை);

அந்த நிறுவனம், 31–03–2007 ஆம் நாளிலிருந்து விதிவிலக்கைச் சரண் செய்வதாகத் தற்போது தெரிவித்துள்ளதாலும் (காண்க. மேலே பார்வை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள 08–09–2008 ஆம் நாளிட்ட அதனுடைய கடிதம்);

புது தில்லி, வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் – II, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், விதிவிலக்கைச் சரண் செய்வதற்கான நிறுவனத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளதாலும்;

எனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிகள் மற்றும் பல்வகை வழிவகைகள் (மத்திய சட்டம் 19/1952) சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், சென்னை, திருவாளர்கள் கார்டன் உட்ரோஃப் தோல் தயாரிப்பு நிறுவனத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 17 ஆம் பிரிவைச் சார்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் வழங்கப்பட்ட விதிவிலக்கை 31–03–2007 ஆம் நாளிலிருந்து இதனால் ரத்து செய்கிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசு ஆணை (நிலை) எண் 144, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 14 செப்டம்பர் 2015.]*

• **1961** ஆம் ஆண்டு மகப்பேறு சலுகைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **53/1961**), **2**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் வரம்பு நிபந்தனையின் கீழ் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் **1961**ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **27/1961**) **2**ஆம் பிரிவைச் சேர்ந்த (g)—பகுதியில் வரையறுக்கப்பட்டவாறாக, மேற்சொன்ன சட்டத்தின் அனைத்து விதித்துறைகளும், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களுக்கு பொருந்தும் என இதனால் அறிவிக்கிறார்.

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 18 நவம்பர் 2015.]*

• **1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—**600 006**—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **9—11—2011** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு **2**—ல், **381** முதல் **383** வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ. வே/443/2011 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(1)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் பாலிதீன் தயாரிப்பு மற்றும் மிருதுவான ரப்பர் வகைகள் செயல்முறைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்பு ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**பாலிதீன் தயாரிப்பு மற்றும் மிருதுவான ரப்பர் வகைகள் செயல்முறைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்பு ஆகியவற்றில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* |
|---|---|
| | *ரூ. காசு.* |
| *(1)* | *(2)* |
| **(அ) பாலிதீன் தயாரிப்பில் வேலைவாய்ப்பு :** | |
| **(I) தேர்ச்சி பெறாதவர்கள்:** | |
| **1.** இயக்குபவர் | **6047.00** |
| **2.** உதவியாள் | **5853.00** |

| *தொழிலாளர் வகைகள்* *(1)* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* *ரூ. காசு.* *(2)* |
|---|---|
| **(II) ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. இயக்குபவர் | |
| 2. சுழற்றுபவர் | 6244.00 |
| 3. நெசவாளர் | |
| 4. பாவு ஓட்டுபவர் | |
| **(III) தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. இயக்குபவர் | |
| 2. உருவம் கொடுப்பவர் | |
| 3. அச்சு இயக்குபவர் | 6636.00 |
| 4. இயந்திரம் இயக்குபவர் | |
| 5. ஜாபர் | |
| **(IV) உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. முறைமாற்றுப் பணி பொறுப்பாளர் | |
| 2. முதலாள் | 7616.00 |
| 3. மேற்பார்வையாளர் | |
| **(V) பொதுவான வகையினர்கள்:** | |
| 1. மேலாளர் | 9382.00 |
| 2. உதவி மேலாளர் | 8205.00 |
| 3. கணக்காளர் | 7224.00 |
| 4. பண்டக காப்பாளர் அல்லது கிடங்கு காப்பாளர் | 7028.00 |
| 5. முதுநிலை உதவியாளர் | |
| 6. கணக்கு உதவியாளர் | 6832.00 |
| 7. எழுத்தர் அல்லது அலுவலக உதவியாளர் | |
| 8. தட்டச்சர் | 6931.00 |
| 9. சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 7028.00 |
| 10. வரவேற்பாளர் | 6832.00 |
| 11. துணையாள் | 6047.00 |
| 12. விற்பனையாளர் | |
| 13. அலுவலகப்பையன்/ஏவலாள் | 5853.00 |
| 14. காவலாளி | |

**ஆ. மிருதுவான ரப்பர் வகைகள் தயாரிப்பு செயல்முறைகளில் வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| **(I) தேர்ச்சி பெறாதவர்கள் :** | |
| 1. இயக்குபவர் | |
| 2. தொழிலாளர் நிலை – (III) | 6244.00 |
| 3. சுத்தம் செய்பவர் | |
| 4. சிப்பமாக்குபவர் | 5853.00 |
| 5. உதவியாள் | |

| *தொழிலாளர் வகைகள்* <br> *(1)* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* <br> *ரூ. காசு.* <br> *(2)* |
|---|---|
| **(II) ஓரளவு தேர்ச்சி பெற்றவர்ாகள்:** | |
| 1. இயக்குபவர் | |
| 2. கொதிகலன் இயக்குபவர் | 6439.00 |
| 3. தொழிலாளர் நிலை – II | |
| **(III) தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. இயக்குபவர் | |
| 2. தொழிலாளர் நிலை – I | 6636.00 |
| **(IV) உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. இளநிலை செயல் அலுவலர் | 8597.00 |
| 2. முதலாள் | |
| 3. மேற்பார்வையாளர் | 7616.00 |
| 4. பிரிவுத்தலைவர் | |
| **(V) பொதுவான வகையினர்கள்:** | |
| 1. மேலாளர் | 9382.00 |
| 2. உதவி மேலாளர் | 8205.00 |
| 3. கணக்காளர் | 7224.00 |
| 4. பண்டகக் காப்பாளர் அல்லது கிடங்குக் காப்பாளர் | |
| 5. முதுநிலை உதவியாளர் | 7028.00 |
| 6. கணக்கு உதவியாளர் | |
| 7. எழுத்தர் அல்லது அலுவலக உதவியாளர் | 6832.00 |
| 8. வரவேற்பாளர் | |
| 9. தட்டச்சர் | 6931.00 |
| 10. சுருக்கெழுத்து – தட்டச்சர் | 7028.00 |
| 11. துணையாள் | |
| 12. விற்பனையாளர் | 6047.00 |
| 13. அலுவலகப் பையன்/ஏவலாள் | |
| 14. காவலாளி | 5853.00 |
| **இ. பிளாஸ்டிக் தயாரிப்பில் வேலைவாய்ப்பு** | |
| **(I) தேர்ச்சி பெறாதவர்கள்** | |
| 1. இயக்குபவர் | 6047.00 |
| 2. உதவியாளர் | |
| 3. பணி முடிவாக்குபவர் | 5853.00 |
| 4. சிப்பமாக்குபவர் அல்லது அனுப்புகை உதவியாளர் | |

| *தொழிலாளர் வகைகள்* <br> *(1)* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* <br> *ரூ. காசு* <br> *(2)* |
|---|---|
| **(II) ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. பட்டறை இயக்குபவர் | |
| 3. இயந்திர உதவியாளர் | |
| 4. கடைசலாள் | |
| 5. அச்சிடுபவர் | |
| 6. பற்றவைப்பவர் | 6244.00 |
| 7. ஒருங்கிணைப்பவர் | |
| 8. வெட்டுபவர் | |
| 9. இயந்திரம் இயக்குபவர் | |
| 10. தையற்காரர் | |
| 11. ஆய்வுக்கூட உதவியாளர் | |
| **(III) தேர்ச்சி பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. அமைப்பவர்–இயக்குபவர் | |
| 3. வார்ப்படம் தயாரிப்பவர் | 6636.00 |
| 4. மின் கம்மியர் | |
| 5. அச்சு தயாரிப்பவர் | |
| **(IV) உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்** | |
| 1. முதலாள் | 7616.00 |
| 2. மேற்பார்வையாளர் | |
| **(V) பொதுவான வகையினர்கள்** | |
| 1. மேலாளர் | 9382.00 |
| 2. உதவி மேலாளர் | 8205.00 |
| 3. கணக்காளர் | 7224.00 |
| 4. கணிணி நிரல் தயாரிப்பவர் | |
| 5. பண்டகக் காப்பாளர் அல்லது கிடங்குக்காப்பாளர் | 7028.00 |
| 6. முதுநிலை உதவியாளர் | |
| 7. கணக்கு உதவியாளர் | 6832.00 |
| 8. எழுத்தர் அல்லது அலுவலக உதவியாளர் | |
| 9. வரவேற்பாளர் | |
| 10. தட்டச்சர் | 6931.00 |
| 11. சுருக்கெழுத்து – தட்டச்சர் | 7028.00 |
| 12. துணையாள் | 6047.00 |
| 13. விற்பனையாளர் | |
| 14. அலுவலகப் பையன்/ஏவலாள் | 5853.00 |
| 15. காவலாளி | |

**விளக்கம்**

**(1)** அகவிலைப்படி:— தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன்இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது ரூ. 36.35 (முப்பத்து ஆறு ரூபாய் முப்பத்தைந்து காசுகள்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில்) விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**(2)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எந்த வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**(3)** ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**(4)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 206, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 14.12.2015.]*

தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 42ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 05—11—2014ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம்-II பிரிவு 2ல் 736 மற்றும் 737ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)தொ.வே/667/2014ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் செயல்நோக்கங்களுக்காக கீழ்காணும் அட்டவணையின் நெடும்பத்தி (2)இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை, அதன் நெடும்பத்தி (3)—இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான உள்ளூர் பகுதிகளின் ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்.* *(1)* | *அலுவலர்கள்* *(2)* | *உள்ளூர் பகுதிகள்* *(3)* |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், சென்னை | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 2. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 3. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், மதுரை | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |

| *தொடர் எண்.* | *அலுவலர்கள்* | *உள்ளூர் பகுதிகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 4. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 5. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், (ஆய்வு), சென்னை. | |
| 6. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், (குறைந்தளவு ஊதியங்கள்) | தமிழ்நாடு முழுவதும் |
| 7. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர்—I, சென்னை. | சென்னை மாநகராட்சி |
| 8. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர்—II, சென்னை. | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| 9. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 11. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், மதுரை. | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், மற்றும் சிவகங்கை மாவட்டங்கள். |
| 12. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 13. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 14. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள். |
| 15. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 16. | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர், குன்னூர். | நீலகிரி நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் |
| 17. | தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர். | 2009ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் பகுதிகள் |
| 18. | தொழிலாளர் நலத்துறை துணை ஆய்வாளர் | |
| 19. | தொழிலாளர் நலத்துறை உதவி ஆய்வாளர் | |
| 20. | தொழிலாளர் நலத்துறை பெண் ஆய்வாளர், சென்னை. | சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். |
| 21. | தொழிலாளர் நலத்துறை பெண் ஆய்வாளர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 22. | தொழிலாளர் நலத்துறை பெண் ஆய்வாளர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 23. | தமிழ்நாடு சிறப்பு பொருளாதார மண்டலங்களின் வளர்ச்சி ஆணையர்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலம் |

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 207, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 14 டிசம்பர் 2015.]*

**2009** ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் **1/2010**) **14** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1) (3)**ஆகிய உட்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் **10–04–1991** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II- பிரிவு 2ல் 253 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)LE/2053/91 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மாநிலத்திற்குள்ளேயே நடைபெறும் வணிகம் மற்றும் வர்த்தகம் தொடர்பாக மேற்சொன்ன சட்டத்தின் கீழ் அதிகாரங்களை செலுத்துவதற்கும் கடமைகளை ஆற்றுவதற்கும் கீழே அட்டவணையின் **(2)**ஆம் நெடும்பத்தில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களை சட்டமுறை எடையளவு கூடுதல் கட்டுபாட்டு அலுவலர்களாக இதனால் நியமனம் செய்வதுடன், இதன் நெடும்பத்தி **(3)**இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டவாறாக அவர்கள் அத்தகைய அதிகாரங்களை செலுத்துவதற்கும் கடமைகளை ஆற்றுவதற்கும் என உள்ளூர் எல்லைகளையும் வரையறை செய்கிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்.* | *அலுவலர்கள்* | *உள்ளூர் எல்லைகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தொழிலாளர் நல துணை ஆணையர்–I, சென்னை. | சென்னை மாநகராட்சி |
| 2. | தொழிலாளர் நல துணை ஆணையர்–II, சென்னை. | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள். |
| 3. | தொழிலாளர் நல துணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள். |
| 4. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையர், மதுரை. | மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், மற்றும் சிவகங்கை மாவட்டங்கள். |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் நல துணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நல துணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நல துணை ஆணையர், குன்னூர். | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்கள். |

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

***அறிவிக்கை–I***

*[அரசாணை (நிலை) எண் 208, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 14 டிசம்பர் 2015.]*

**1966** ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தயாரிக்கும் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **32/1966**) **6**ம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **08–03–2000** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II பிரிவு (2)ல் 123 மற்றும் 124ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)LE/250/2000 ஆம் எண் அறிவிக்கையை ரத்துசெய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் செயல்நோக்கங்களுக்காக கீழ்க்காணும் அட்டவணையின் **(2)** நெடும்பத்திலியில் குறிப்பிடப்படுள்ள அலுவலர்களை ஆய்வாளர்களாக இதனால் நியமிப்பதுடன், அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் அதிகாரம் செலுத்துவதற்காக, இந்த அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரானப் பதிவுகளில் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதிகளையும் வரையறுக்கிறார்.

**அட்டவணை**

| தொடர் எண். | நபர்கள் | உள்ளூர் பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தொழிலாளர் நல துணை ஆணையர்–I, சென்னை | சென்னை மாநகராட்சி |
| 2. | தொழிலாளர் நல துணை ஆணையர்–II, சென்னை | திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள். |
| 3. | தொழிலாளர் நல துணை ஆணையர், வேலூர் | வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். |
| 4. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையர், மதுரை | மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள். |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் நல துணை ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நல துணை ஆணையர், சேலம் | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நல துணை ஆணையர், குன்னூர் | நீலகிரி, நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்கள். |
| 11. | தொழிலாளர் நல பெண் ஆய்வாளர், சென்னை | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். |
| 12. | தொழிலாளர் நல பெண் ஆய்வாளர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 13. | தொழிலாளர் நல பெண் ஆய்வாளர், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 14. | தொழிலாளர் நல ஆய்வாளர்கள் | 2009–ம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் பகுதிகள். |
| 15. | தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் | |
| 16. | தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் | |

***அறிவிக்கை–II***

*[அரசாணை (நிலை) எண் 208, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 14 டிசம்பர் 2015.]*

1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தயாரிக்கும் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 32/1966) 5ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 08–03–2000 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II பிரிவு (2)இல் 124ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)LE/250/2000 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்னப் பிரிவின் கீழ் மேல்முறையீடுளை விசாரணைச் செய்கின்ற செயல் நோக்கத்திற்காக கீழே அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை, அந்த அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்கான அலுவலர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அட்டவணை**

| தொடர் எண். | அலுவலர்கள் | பகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தொழிலாளர் நல துணை ஆணையர்–I, சென்னை. | 1965 ஆம் ஆண்டு மிகைச் சம்பளம் வழங்குதல் (Bonus) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1965), 27 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டவாறாக அதிகார வரம்பிற்குட்பட்டப் பகுதி |
| 2. | தொழிலாளர் நல துணை ஆணையர்–II, சென்னை. | |
| 3. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | |
| 4. | தொழிலாளர் நல துணை ஆணையர், திண்டுக்கல் | |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையர், மதுரை | |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையர், சேலம் | |
| 7. | தொழிலாளர் நல துணை ஆணையர், கோயம்புத்தூர். | |
| 8. | தொழிலாளர் நல துணை ஆணையர், குன்னூர் | |
| 9. | தொழிலாளர் நல துணை ஆணையர், திருநெல்வேலி | |
| 10. | தொழிலாளர் நல துணை ஆணையர், வேலூர் | |

**குமார் ஜெயந்த்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை*

*[அரசாணை (2டி) எண் 3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (து1)த் துறை, 21 ஜனவரி 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த (வரைவு) அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக தமிழ்நாடு அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 09–11–2011 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு – 2 இல் 383 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/444/2011ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், இரசாயன உரத்தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

### விவர அட்டவணை

### இரசாயன உரத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (ரூபாய்–காசு)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **1 நிருவாகப் பணியாளர்கள்:** | |
| (1) மேலாளர் | 7276.00 |
| (2) எழுத்தர்/தட்டச்சர்/கணக்கர் | 6129.00 |
| (3) ஓட்டுநர்/பண்டகசாலைக் காப்பாளர் | 5964.00 |
| (4) அலுவலக உதவியாளர் | 5637.00 |
| **2 தொழிலாளர்களின் வகை :** | |
| (1) **உயரளவு பயிற்சி பெற்றவர்கள்** மேற்பார்வையாளர்கள்/வேதியியலாளர் | 6866.00 |
| (2) **பயிற்சி பெற்றவர்கள்** இயக்குபவர்/தொழில்நுட்பப்பணியாளர்/ மின் கம்மியர்/பொருத்துநர் | 6293.00 |
| (3) **பயிற்சி பெறாதவர்கள்** பொதுவான தொழிலாளர்கள்/ உதவியாளர்/நிரப்புநர் | 5963.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டு சென்னை மாநகர, நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு வந்த 161 புள்ளிகள்). மேற்கூறிய 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு 35 ரூபாய் (முப்பத்தைந்து ரூபாய் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

*(ii)* இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை, நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைப்புள்ளி குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, **மாதாந்திர ஊதியம்** 26ஆல் வகுப்பப்படவேண்டும்.

(3) ஆண் பெண் தொழிலாளர்கள் ஒரே தன்மையுடைய வேலையைச் செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போதுள்ள ஊதியங்கள் கூடுதலாக **இருக்குமிடங்களில், அதே** ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(5) இரசாயன உரத் தொழிற்சாலையில் பணியமர்த்தப்படும் பாதுகாப்புச் சேவை வகையினருக்கு நிர்ணயிக்கப்பட்ட/ **திருத்தியமைக்கப்பட்ட** குறைந்தளவு ஊதியங்கள் பொருந்தும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 5, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 27 ஜனவரி 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 26–10–1960ஆம் நாளிட்ட *புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழின்* பாகம் II பிரிவு 1இல் 632 மற்றும் 633ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழில், தொழிலாளர் மற்றும் கூட்டுறவுத் துறையின் II-1, 1916/1960 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து விட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர், அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையை கருதிப்பார்த்த பின்னர், கீழ்காணும் விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளாடை தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இதனால் திருத்தியமைக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**உள்ளாடை தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணிகளின் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாயில்)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | வெட்டுதல் | 4,248.00 |
| 2. | தைத்தல் | 4,248.00 |
| 3. | இஸ்திரி போடுதல் | 4,248.00 |
| 4. | சிப்பமாக்குதல் | 4,248.00 |
| 5. | கட்டுதல் | 4,248.00 |
| 6. | சோதித்தல் | 2,448.00 |
| 7. | பெயர்ச்சீட்டு ஒட்டுதல் | 2,148.00 |
| 8. | கையால் மடித்தல் | 1,998.00 |
| 9. | டேமேஜ் | 1,908.00 |
| 10. | மடித்து கட்டுவதற்கு உதவுதல் | 1,848.00 |

(2) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர, நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982ஆம் ஆண்டில் 10 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ. 3.80 காசுகள் (மூன்று ரூபாய் எண்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்,*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 27 ஜனவரி 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பபிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் பின்னலாடை தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள •பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இதனால் நிர்ணயிக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பின்னலாடை தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ.காசு.)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | மேற்பார்வையாளர் | 6,030.00 |
| 2. | முதலாள் | 6,000.00 |
| 3. | இயந்திரம் இயக்குபவர் | 4,248.00 |
| 4. | வருகையை சரிபார்த்தல் | 2,448.00 |
| 5. | உதவியாளர்/துப்புரவாளர் | 1,848.00 |

(2) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன், பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடபட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3.80 (மூன்று ரூபாய் எண்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2 D) எண் 9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 15 பிப்ரவரி 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19—10—2011ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு—2இல் 365 முதல் 367 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/433/2011 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**மின்னணுவியல் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்* | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | |
|---|---|---|
| *(1)* | *(2)* | |
| | *மண்டலம்—A (ரூ.காசு)* | *மண்டலம்—B (ரூ.காசு)* |
| I **பொதுவான பதவிவகையினர்:** | | |
| (1) விற்பனை உதவியாளர்<br>(2) கொள்முதல் உதவியாளர் | 6404.00 | 6214.00 |
| (3) உதவியாளர் (உற்பத்தி, திட்டமிடுதல் கட்டுப்பாடு<br>(4) கணக்காளர்<br>(5) சுருக்கெழுத்தாளர் | 7055.00 | 6801.00 |

| தொழிலாளர் வகைகள் (1) | மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (2) மண்டலம்–A (ரூ.காசு) | மண்டலம்–B (ரூ.காசு) |
|---|---|---|
| (6) தட்டச்சர்<br>(7) எழுத்தர்/அலுவலக உதவியாளர்<br>(8) காசாளர்/பண்டகசாலை உதவியாளர் | 6404.00 | 6214.00 |
| (9) பண்டகசாலை காப்பாளர் | 7055.00 | 6801.00 |
| (10) நேரக் காப்பாளர்<br>(11) ஓட்டுநர் | 6404.00 | 6214.00 |
| (12) காவலர்/காவலாள்/பாதுகாவலர் | 5971.00 | 5866.00 |
| (13) ஏவலாள்/உதவியாள்/அலுவலகப்பையன் | 5753.00 | 5650.00 |
| (14) மாலி/தண்ணீர் வழங்குபவர்/தோட்டக்காரர்/ பெருக்குபவர்/துப்புரவுப்பணியாளர் | 5753.00 | 5650.00 |
| (15) வரவேற்பாளர்/தொலையச்சு அல்லது தொலைபேசி இயக்குபவர் | 6404.00 | 6214.00 |
| **II இதர பதவிவகையினர்:** | | |
| (A) **உயர் தேர்ச்சிபெற்றவர்** | | |
| (1) பணிமனை மேற்பார்வையாளர்/ கூட்டிணைப்பு மேற்பார்வையாளர்<br>(2) ஆய்வகப் பகுப்பாய்வாளர்<br>(3) மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய யாதொரு உயர் தேர்ச்சி பெற்ற பதவிவகையினர் | 7055.00 | 6801.00 |
| (B) **தேர்ச்சிபெற்றவர்** | | |
| (1) தர ஆய்வாளர்<br>(2) தொழில் நுட்பவியலாளர்/தொழில் நுட்ப உதவியாளர்<br>(3) இயந்திர கம்மியர்<br>(4) அச்சு வடிவமைப்பு தயாரிப்பாளர்<br>(5) வரைவாளர்<br>(6) புகைப்படக் கருவியாளர்<br>(7) இயந்திரவியலாளர் (மெசினிஸ்ட்)<br>(8) இயந்திரம் இயக்குபவர்<br>(9) அரைவையாளர்<br>(10) அச்சு வடிவமைப்பு வார்ப்படம் இயக்குபவர்<br>(11) அச்சு வார்ப்பவர்<br>(12) பற்றவைப்பவர்<br>(13) பொருத்துநர்<br>(14) கடைசல் பிடிப்பவர் | 6404.00 | 6214.00 |

| *தொழிலாளர் வகைகள்* (1) | *மாதாந்திர குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* (2) | |
|---|---|---|
| | *மண்டலம்–A (ரூ.காசு)* | *மண்டலம்–B (ரூ.காசு)* |
| (15) மின் பணியாளர் | | |
| (16) வானொலி மற்றும் தொலைக்காட்சி கம்மியர் | | |
| (17) கணினி இயக்குபவர் | | |
| (18) வரிசைப்படுத்துபவர் | | |
| (19) இயந்திரங்கள் பரமரிப்பு உதவியாளர்கள் (மின்னியல், மின் இயந்திரவியல், இயந்திரவியல் மற்றும் மின்னணுவியல் | | |
| (20) மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய யாதொரு உயர் தேர்ச்சி பெற்ற பதவிவகையினர் | | |
| (C) **ஓரளவு தேர்ச்சிபெற்றவர்:** | | |
| கூட்டிணைப்பு இயக்கம்,– | | |
| (1) கூட்டிணைப்பு தொடர்பான சுற்றுதல்/ மின்கம்பியமைத்தல்/ பொருத்துதல்/ சூட்டிணைத்தல்/ ஒழுங்குவித்தல்/ சோதனையிடல் மற்றும் ஏனைய யாதொரு ஓரளவு தேர்ச்சி பெற்ற செயல்பாடுகள் (பொதுவான கல்வித்தகுதியுடன் அல்லது தகுதியின்மையுடன்) | | |
| (2) பிளான்டிங் ஒருங்கிணைப்பாளர் | | |
| (3) கூட்டிணைப்பு இயக்குபவர் | | |
| (4) அழுத்தக் கருவி இயக்குபவர் | 5971.00 | 5866.00 |
| (5) அச்சிடுங்கருவி இயக்குபவர் | | |
| (6) துளையிடுங்கருவி இயக்குபவர் | | |
| (7) துணையழுத்தக் கருவி இயக்குபவர் | | |
| (8) வண்ணம் பூசுபவர் | | |
| (9) பளபளப்பாக்குபவர் | | |
| (10) மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய யாதொரு ஓரளவு தேர்ச்சி பெற்ற பதவிவகையினர் | | |
| **தேர்ச்சி பெறாதவர்:** | | |
| (1) உதவியாள் | | |
| (2) சுத்தப்படுத்துபவர் | | |
| (3) மஸ்தூர் | | |
| (4) சிப்பமாக்குபவர் | 5753.00 | 5650.00 |
| (5) மேலே வகைப்படுத்தப்படாத ஏனைய யாதொரு தேர்ச்சி பெறாத பதவிவகையினர் | | |

**விளக்கங்கள்:—**

(1) மண்டலங்களின் வகைப்பாடும் பணியாளர்களின் பதவிவகையும் பின்வருமாறு:—

(a) **மண்டலங்களின் வகைப்பாடு,—**

மண்டலம் A : அனைத்து மாவட்டத் தலைமையிடங்கள்
மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்.

மண்டலம் B: இதர பகுதிகள்.

(b) **பதவி வகையின் வகைப்பாடு,—**

(i) **உயர் தேர்ச்சி பெற்றவர்கள்,—** உயர் தேர்ச்சிபெற்ற பணியாளர் என்பவர் திறமை அல்லது மேம்பட்ட அளவிலான கூர்மைத் தகுதி தேவைப்படுகின்ற ஒரு பணியினைச் செய்பவரும் மேற்பார்வையிடும் திறனும் உடையவராவார்.

(ii) **தேர்ச்சி பெற்றவர்கள்,—** தேர்ச்சிபெற்ற பணியாளர் என்பவர் ஒரு பணியைத் தனித்துச் செயலாற்றித் திறம்பட முடித்து மிகச் சரியான பணித்திறத்தை வெளிப்படுத்தும் தகுதி மிக்கவர் ஆவார். தேவையேற்படும்போது, சிறு மின்சுற்று வரைபடங்களை அறிந்து அதில் பணிசெய்யும் தகுதிபெற்றவராக இருக்கவேண்டும்.

(iii) **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்,—** ஓரளவு தேர்ச்சிபெற்ற பணியாளர் என்பவர் குறிப்பிட்டதொரு தொழிலில் பணிசெய்யவும் எளிய சிறு கருவிகள் மற்றும் இயந்திரங்கள் உதவியுடன் எளிய பணி செய்யவும் போதிய அல்லது கூடுதல் அறிவுடையவர் ஆவார்.

(iv) **தேர்ச்சி பெறாதவர்கள்,—** தேர்ச்சிபெறாத பணியாளர் என்பவர் தனிப் பயிற்சி எதுவும் பெறாதவர் ஆவார். அவரது பணி சிறிதும் தனிப்பட்டு முடிவெடுத்தல் அல்லது முன் அனுபவம் ஏதும் தேவைப்படாத ஆனால், பணிச் சூழ்நிலை தெரிந்திருப்பதான தன்மை தேவைப்படுவதாக அமைகிறது இவ்வாறாக, அவருடைய பணியானது பொருட்கள் அல்லது சரக்குகள் வகையில் தேவைப்படலாம்.

(2) **அகவிலைப்படி** : மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(i) அகவிலைப்படி 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ.35.00 (முப்பத்தைந்து ரூபாய் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதிய வீதங்களை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 15 பிப்ரவரி 2016.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **22–4–2010** ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பு வெளியீட்டில் பாகம் II, பிரிவு–**2** இல் **1** மற்றும் **2** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/224(a)/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்தபின்னர் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முந்திரித் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, கீழக்கண்ட விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை இதன் மூலம் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் **(b)** பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**(2)** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**முந்திரித் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியின் வகைகள் மற்றும் பணியாளர்கள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **(1)** | தோடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. **20.32** |
| **(2)** | தோல் உரித்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. **23.70** |
| **(3)** | முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், ஓடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. **23.70** |
| **(4)** | **தரம் பிரித்தல்** | |
| | (i) உடையாத வெள்ளை பருப்புகள் | விளக்கங்களின் **(2)** ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலை ஒன்றுக்கு ரூ.**149.15** |
| | (ii) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள் வகைப்படுத்தப்படாத (Desert) உடையாத பருப்புகள், கட்டல், கரி, முந்திரிப் பருப்புத் துணுக்குகள் | |
| | (iii) காரநிறம் பிருவல் | |
| | (iv) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | |
| | (v) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | |
| | (vi) கட்டல் துணுக்குகள் (பொடி) | |
| **(5)** | வறுத்தல் | நாளொன்றுக்கு ரூ. **240** |
| **(6)** | போர்மா பணியாளர் | |
| **(7)** | எண்ணெய் பிழியும் இயந்திரம் இயக்குபவர் | |
| **(8)** | தகர வேலை செய்பவர் | |
| **(9)** | சிப்பம் செய்பவர் | |
| **(10)** | (a) மைகாட் | நாளொன்றுக்கு ரூ.**209.50** |
| | (i) மடியினைச் சோதனையிடுவது உட்பட பல்வகைப் பணி | |
| | (ii) முந்திரிப்பருப்பினைச் சோதனையிடல் | |
| | (iii) டப்பாவில் நிரப்புபவர் * | |
| | (iv) சமையலாள் | |
| | (v) பெருக்குபவர்/துப்புரவுப் பணியாளர் | |
| | **(*)** வழக்கமான பணியுடன் டப்பாவினை நிரப்பும் பணியையும் கூடுதலாகச் செய்கின்ற டப்பாவினை நிரப்புவருக்கு, அத்தகைய நாட்களில் மட்டும் நாளொன்றுக்கு ரூ.**9.50** கூடுதலாக வழங்கப்படவேண்டும். | |
| | (b) மேற்பார்வையிடும் மைகாட் | நாளொன்றுக்கு ரூ.**231.00** |
| | **(11)** மேற்பார்வையாளர்/மேஸ்திரி/காவலாள் | மாதமொன்றுக்கு ரூ.**5771.00** |
| | **(12)** எழுத்தர்/தட்டச்சர் | மாதமொன்றுக்கு ரூ.**5731.00** |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** *(i)* மாறுகின்ற அகவிலைப்படியானது 827 என்ற டிசம்பர் 2010க்கான நாகர்கோயில் மைய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.) 827 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 25 காசுகள் (இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக மாறுகின்ற அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) மாறுகின்ற அகவிலைப்படி திருத்தமானது, முறையே ஜனவரியிலிருந்தும் ஜூலையிலிருந்தும் தொடங்குகின்ற முந்தைய ஆறு திங்களுக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்தும் அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்தும் செயலுக்கு வரும்.

*(iii)* முதல் கணக்கீடு, இனம் (ii)—இல் குறிப்பிடப்பட்டுள்ள நாகர்கோயில் மையத்திற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2) அகவிலைப்படி வழங்குவதற்கான வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை:—**

கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்த பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள், அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பணியைச் செய்தால் மட்டுமே, மேலே நிர்ணயிக்கப்பட்டவாறான அகவிலைப்படியைப் பெற உரிமையுடையவர்கள் ஆவர்.

| | *பணி வகைகள்* (1) | *வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை* (2) |
|---|---|---|
| (1) | தோடு நீக்குதல்/உடைத்தல் | 6 கிலோ கிராம் |
| (2) | தோல் நீக்குதல் | 5 கிலோ கிராம் |
| (3) | முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், தோடு உடைத்தல் | 5 கிலோ கிராம் |
| **தரம்** | **பிரித்தலில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த பணிகளைப் பொறுத்தவரையில்** | **பணிச்சுமை** |
| (1) | உடையாத வெள்ளை பருப்புகள் | 100 கிலோ கிராம் |
| (2) | தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள் வகைப்படுத்தப்படாத உடையாத பருப்புகள், கட்டல், கரி, தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள் | 14 கிலோ கிராம் |
| (3) | கார நிறம் பிருவல் | 10 கிலோ கிராம் |
| (4) | புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | 6 கிலோ கிராம் |
| (5) | தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | 12 கிலோ கிராம் |
| (6) | கட்டல் துணுக்குகள் (பொடி) | 4 கிலோ கிராம் |

**(3)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(4)** (i) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(ii) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

**(5)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 11, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (து1)த் துறை, 15 பிப்ரவரி 2016.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **12–05–2012** ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II, பிரிவு–2 இல் **251** மற்றும் **252** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/277/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(1)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் மின்னணு தொழிற்சாலைகளில் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (பி) பகுதியின் கீழ் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**2.** இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**மருந்துப் பொருட்கள் விற்பனைப் பிரதிநிதிகள் பணியில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | மருந்து தயாரிப்பு அல்லது விற்பனை நிலையங்களில் பணிபுரியும் மருந்து மற்றும் விற்பனை பிரதிநிதிகள் | 10518.00 |
| 2 | மருந்துப் பொருட்கள் தயாரித்து மொத்தமாக விற்பனை செய்யும் இடங்களிலும் மருந்துப் பொருட்கள் விநியோகப் பிரிவுகளிலும் பணிபுரியும் விற்பனையாளர்கள் | 7017.00 |

***விளக்கங்கள்:* அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்டு குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி புள்ளி ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.43.55 (நாற்பத்து மூன்று ரூபாய் ஐம்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை), சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**[அரசாணை(2ப) எண். 13, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 17 பிப்ரவரி 2016.]**

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி மற்றும் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **23-03-2011**ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்-II, பிரிவு **-2** இல் **140** மற்றும் **141**ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/143/2011 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்தபின்னர், தமிழ்நாடு மாநிலத்தில், காளான் வளர்ப்பு மற்றும் தொடர்புடைய தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்காணும் விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**காளான் வளர்ப்பு மற்றும் அது தொடர்புடைய பணிகளில் வேலைவாய்ப்பு.**

| தொடர் எண் | பணியாளர்களின் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (மாதமொன்றுக்கு) | | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | |
| | | மண்டலம்-1 (ரூ. காசு) | மண்டலம்-2 (ரூ. காசு) | மண்டலம்-3 (ரூ. காசு) |
| வகைப்பாடு எண்.1 | | | | |
| | மேற்பார்வையாளர்கள் | 8,847.00 | 8,785.00 | 8,723.00 |
| வகைப்பாடு எண்.2 | | | | |
| (1) | கணக்காளர் | | | |
| (2) | மின்கம்மியர் | | | |
| (3) | போப்காட் இயக்குபவர்கள் | 7,607.00 | 7,545.00 | 7,483.00 |
| (4) | வளர்ப்பவர்கள் | | | |
| **•வகைப்பாடு எண்.3** | | | | |
| (1) | ஒட்டுநர்கள் | | | |
| (2) | ஆய்வக தொழில்நுட்பப் பணியாளர் | 6,739.00 | 6,677.00 | 6,615.00 |
| (3) | பயிற்சி பெற்ற பணியாளர்கள் | | | |
| **வகைப்பாடு எண்.4** | | | | |
| (1) | பயிற்சி பெறாத பணியாளர்கள் | | | |
| (2) | காவலாள் | 5,189.00 | 5,041.00 | 4,979.00 |

| வரிசை எண். | பணியின் வகைகள் மற்றும் பணியாளர்களின் வகைப்பாடுகள் | குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள் (நாளொன்றுக்கு) ரூபாய் காசு |
|---|---|---|
| (1) | அடுக்கு அமைக்கும் தொழிலாளர்கள் (டர்னிங்-I, டர்னிங்-II, டர்னிங்-III) | |
| (2) | பங்கர் இயக்குதல் (பங்கர்-I, பங்கர்-II, பங்கர்-III) | |
| (3) | காளான் கருவிழையைக் கலக்குதல் | |
| (4) | பிளஸ்சிங் (Flussing) செயல்முறை | |
| (5) | பெட்டியில் அடைத்தல் | 191.50 |
| (6) | பறித்தல் | |

| வரிசை எண் | பணியின் வகைகள் மற்றும் பணியாளர்களின் வகைப்பாடுகள் | குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (நாளொன்றுக்கு) ரூபாய் காசு |
|---|---|---|
| (7) | சிப்பம் செய்தல் | |
| (8) | நீர் விடுதல் | |
| (9) | நிரப்புதல் | |
| (10) | ஏனைய பொதுவான தொழிலாளர்கள் (மேற்சொன்ன எந்த ஒரு வகைப்பாட்டின் கீழும் இடம் பெறாத தொழிலாளர்கள்) | 191.50 |

***விளக்கங்கள்***: (1) அகவிலைப்படி (i) அகவிலைப்படியானது 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 30.90 காசுகள் (முப்பது ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) வீதம், அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, தொடர்ந்து வரும் 12 மாதங்களின் (அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாதங்கள்) நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கீடு செய்யப்படும்.

(iii) அகவிலைப்படியின் முதல் கணக்கீடு முந்தைய ஆண்டு அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) மண்டலங்களின் வகைப்பாடுகள் வருமாறு.

(i) மண்டலம்—1— அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அடங்கும்.

(ii) மண்டலம்—2—அனைத்து நகரியங்கள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பாளையங்கள் ஆகியவை அடங்கும்.

(iii) மண்டலம் 3 — மேலே குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம்—1, மண்டலம்—2, ஆகியவற்றின் கீழ் இடம் பெறாத அனைத்துப் பகுதிகளும் அடங்கும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

(6) இந்த அறிவிக்கைக்கு இணக்கமாகச் செயல்படுகிற நோக்கத்திற்காக, மொத்த அடிப்படை ஊதியமும் அகவிலைப்படியும் சேர்ந்த ஊதியத் தொகுப்பு ஒரு அளவுகோலாக இருக்கும்.

(7) தற்போது வழங்கப்பட்டுவரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழஙகப்படவேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் 56, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை 26 பிப்ரவரி 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தஅளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி மற்றும் மேற்படி சட்டத்தின் 9ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 02–07–2014 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II, பிரிவு 2–இல் 466 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(2)/LE/401/2014 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் “வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்.–”, என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ள

(1) “(1) டாக்டர். எஸ்.எம். சுந்தரராஜன், எஸ்.எம்.எஸ். மருத்துவமனை, 10, சிவன் வடக்கு ரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–627 002” என்ற தொடருக்கு பதிலாக, “டாக்டர். எம். ரமேஷ், முத்து மருத்துவமனை, செக்கு மேட்டுத் தெரு, கள்ளக்குறிச்சி–606 202” என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும் ; மற்றும்

(2) “(3) டாக்டர் டி.ஆர். பாலாஜி, முடநீக்கியல் அறுவை சிகிச்சை மருத்துவர், 317–E, திலகராம் மருத்துவ நிலையம், நடுக்காது, இசக்கியம்மாள் கோயில் சந்திப்பு, K.P. சாலை, நாகர்கோயில்–629 003” என்ற தொடருக்கு பதிலாக, “டாக்டர் எம். தேவானந்த், த/பெ. எம்.ஆர். மோகன், ஆனந்த் மருத்துவமனை, 37, திருச்சி முதன்மைச் சாலை, விழுப்புரம்–605 602” என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை 1 மார்ச் 2016.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தஅளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் விரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 13–09–2012 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II பிரிவு–2 இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/597(a)/2012 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், புகையிலை (பீடி தயாரிப்பு உட்பட பீடி சுற்றுதல்) தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கீழே விவர அட்டவணை நெடும்பத்தி (2)இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### புகையிலை (பீடி தயாரிப்பு உட்பட பீடி சுற்றுதல்) தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *தொழிலாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) ரூ.காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | அளவைப் பொருட்படுத்தாது 1000 ஜாடி பீடிகள் சுற்றுவதற்கு | 107.00 |
| 2. | அளவைப் பொருட்படுத்தாது (முக்கூடல் வகை பீடிகள் அடங்கலாக) 1000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு | 106.80 |

**விளக்கங்கள்:**

(1) மேற்சொன்ன வீதங்களில், மிகை ஊதியம் என்ற வகையில் செலுத்தப்படும் எதுவும் சேர்க்கப்படாது.

(2) **அகவிலைப்படி**: மேலே நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு அகவிலைப்படி அளிக்கப்படும்:—

(i) அகவிலைப்படியானது, 2008 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டெண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது 1960 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதன் அடிப்படையில் 3384 புள்ளிகள் வருங்காலங்களில் 3384 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அதிகப்படியாக ஒவ்வொரு 1000 பீடிகளுக்கும் 3 (மூன்று) காசுகள் மட்டும் கூடுதலாக அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(4) ஒரே தன்மையுடைய பணியைச் செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.